செ.வெ.எண் : நாள் : 17.06.2021

**விருதுநகர் மாவட்ட ஆட்சியராக திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.06.2021) பொறுப்பேற்றுக்கொண்டார்**

---

பெருநகர சென்னை மாநகராட்சி(பணிகள்) துணை ஆணையராக பணியாற்றி வந்த திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் தமிழக அரசின் அரசாணைப்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியராக இன்று (17.06.2021) பொறுப்பேற்றுக்கொண்டார்.

02.09.2013-ல் இந்திய அரசின் குடிமைப்பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெற்று சேலம் மாவட்டம், மேட்டூரில் டிசம்பர் - 2015 முதல் பிப்ரவரி - 2018-ம் ஆண்டு வரை சார் ஆட்சியராக பணியாற்றினார். பிப்ரவரி 2018 முதல் செப்டம்பர் - 2018-ம் ஆண்டு வரை நில நிர்வாகத்துறை இணை ஆணையாளராக பணியாற்றியுள்ளார்கள். செப்டம்பர் - 2018 முதல் மார்ச் - 2020-ம் ஆண்டு வரை வணிகவரித்துறை இணை ஆணையாளராகவும், மார்ச் - 2020 முதல் மே - 2021-ம் ஆண்டு வரை பெருநகர சென்னை மாநாகராட்சியின் வருவாய் மற்றும் நிதித்துறை துணை ஆணையாளராகவும், செப்டம்பர் - 2020 முதல் மே - 2021-ம் ஆண்டு வரை பெருநகர சென்னை மாநாகராட்சி(பணிகள்) துணை ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவராக இன்று (17.06.2021) பொறுப்பேற்றுக்கொண்டார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**